Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Issue - 1, November 2021 E-ISSN: 2583-0481

# Five Levels of Divinity Evinced by Periyazhwar

**Mrs P. Bharathi,** Guest Lecturer, Department of Tamil, Govt. Arts College for Women, Krishnagiri- 02.
ORCiD: https://orcid.org/0000-0002-1099-8607
**DOI: 10.5281/zenodo.5735318**
**Received** 12 July 2021; **Revised form** 11 August 2021; **Accepted** 26 August 2021; **Available online** 26 November 2021

## Abstract

*Theology has been around since ancient times in human history. Vaishnavism is unique in the times when it blossomed in that sense. Vaishnavism is the religion in which Tirumal is the absolute deity. Servants who nurtured Vaishnavism were called 'Azhwars'. Twelve Azhwars received the blessings of Tirumal who immersed the people in the Vaishnava faith. The collection of hymns they bestowed is called Nalayira Dhiviya Prabandham. Vaishnava philosophies developed through philosophical discourses and commentaries. The rhymes of the Azhwars embody the concept of philosophy. One of the peculiarities of Vaishnavism is that the Lord has five stages. These stages are the state of transcendence (vastness), the state of the ocean (strategy), the state of birth (vipavam), the state of karandurai (interdependence) and the hierarchy (archai). These five types are glorified in the hymns of Periyarwar. In that sense, this article explains the levels of divinity and other related concepts found in the Periyazhwar poems.*

**Keywords:** Periyazhwar, Five Stages, Divinity, Pasuras, *Nalayira Dhiviya Prabandham.*

## References

[1] Mr. Ramasubramaniya Sharma. Mrs. R. Ponnammal (U.A.), *Sri Nalayira Dhiviya Prabandham*, First Thousand, Ganga Nilayam, Chennai - 17, 2015.
[2] Dr.R.V. Kamalakkannan, *Nalayira Dhiviya Prabandham*, (Source and Text), Vardhamanan Publishing, Chennai - 17, 2011.
[3] DNS Devarajan, *Vaishnavism and Azhwars*, Sri Shenbaga Publishing, Chennai, 2009.
[4] Dr D.Lalita, *Periya Thirumozhi- An Overview*, Veera Ovu Publishing, Coimbatore, 2002.
[5] Dr.M. Narayanavelupillai, *Sangam Literature Presentation*, Narpavi Prasuram, Chennai, 2008.
[6] Dr.D. Gnanasundaram, *Vaishnava Text*, Motherhood Publishing, Chennai - 17, 1989.
[7] D.S. Rajagopalan, Pillai. *Lokasaryar Aruliya Sri Vasana Pushanam* (Lecture), Azhwars Amuda Nilayam, Chennai, 1994.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, இதழ் - 1, கார்த்திகை 2052 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# பெரியாழ்வார் உணர்த்தும் ஐவகை இறை நிலைகள்

**திருமதி பெ. பாரதி,** கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, அரசு மகளிர் கலைக் கல்லூரி, கிருட்டினகிரி-02.
**ORCiD:** https://orcid.org/0000-0002-1099-8607
**DOI: 10.5281/zenodo.5335936**

**ஆய்வுச் சுருக்கம்**

*மனித வரலாற்றில் மிகப்பழங்காலம் முதல் வேதநெறி தழைத்தோங்கி இருக்கிறது. அந்த வேதநெறியில் மலர்ந்த சமயங்களில் வைணவம் தனிச்சிறப்புப் பெற்றதாகும். திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் வைணவமாகும். வைணவ சயமயத்தைப் போற்றி வளர்த்த அடியார்கள் 'ஆழ்வார்கள்' என்றும் 'ஆச்சாரியர்கள்' என்றும் அழைக்கப்பட்டனர். இறைநெறியில் ஆழ்ந்தும் மக்களை இறைநெறியில் ஆழ்த்தியும் திருமாலின் திருவருள் பெற்ற ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். அவர்கள் அருளிச் செய்த பாசுரங்களின் தொகுப்பு நாலாயிர திவ்வியப் பிரபந்தமாகும். ஆழ்வார்களும், ஆச்சாரிய பெருமக்களும் படைத்த தத்துவ செறிவுமிக்க நூல்களாலும், உரை விளக்கங்களாலும் வைணவ சமய தத்துவங்கள் வளர்ச்சியடைந்தன. தத்துவத்தின் கருதுகோளாக ஆழ்வார்களின் பாசுரங்கள் திகழ்கின்றன. வைணவத்தின் தனித்தன்மைகளுள் ஒன்று இறைவனுக்கு ஐவகை நிலைகள் உண்டு என்பதாகும். இந்த நிலைகள் திருநாட்டு நிலை (பரத்துவம்), பாற்கடல் நிலை (வியூகம்), பிறப்புநிலை (விபவம்), கரந்துறை நிலை (அந்தர்யாமித்துவம்) மற்றும் படிமநிலை (அர்ச்சை) என்பனவாகும். இவ் ஐவகை இறைநெறிகளும் பெரியாழ்வார் திருமொழியில் இடம்பெற்றிருக்கிறது. அந்த வகையில் பெரியாழ்வார் பாசுரங்களில் இடம்பெறும் ஐவகை இறைநெறி தத்துவங்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.*

**திறவுச்சொற்கள்:** பெரியாழ்வார், ஐவகை இறை நிலைகள், பாசுரம், *நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்*

**முன்னுரை**

தமிழகத்தில் திருமால் நெறியை நிலைநிறுத்திய பெருமக்கள் **'ஆழ்வார்கள்'**.

இவர்களை **'திவ்யசூரிகள்', 'பிரபந்தர்', 'மாலுகந்த ஆசிரியர்'** என வேறு பெயர்களாலும் குறிப்பதுண்டு. 'ஆழ்வார்' என்ற சொல்லுக்கு ஆழங்கால்பட்டவர்கள் என்றும் பொருள் உண்டு. **'ஆழங்கால் படுதலாவது இறைவனுடைய இயல்பு, வடிவு, குணங்கள், திருவிளையாடல்கள், செல்வங்கள் ஆகியவற்றில் அவனது அருளால் அனுபவம் பெறுவதாகும்' (வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கியப் பேரகராதி ப. 255).** ஆழ்வார்கள் பன்னிருவரும் திருமாலை வழிபட்டுப் பாடிய பக்திப் பாடல்களின் தொகுப்பு, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாகும். வைணவ பக்தி நெறியானது ஆழ்வார்களின் அருந்தமிழ்ப் பாசுரங்களால் புதுப் பொலிவும், ஏற்றமும் பெற்றது போல, பின்னர் தோன்றிய ஆச்சாரியர்களால் மேலும் வளரச்சி அடைந்தது. அவர்கள் படைத்த தத்துவ செறிவுமிக்க நூல்களாலும், உரை விளக்கங்களாலும் வைணவ சமயத் தத்துவங்கள் வளர்சசியடைந்தன. அச்சமயத்தின்படி. **'இவ்வுலகினைப் படைத்தக் காப்பதற்காகவும், ஜீவர்களுக்குத் தரிசனம் செய்யவும், எம்பெருமான் ஐந்து நிலைகள் எடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அவை முறையே பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை எனப்படும்' (தே.ந.ச. தேவராஜன் வைணவமும் ஆழ்வார்களும், பாகம் – 2, ப. 678).** பன்னிரு ஆழ்வார்களும் திருமாலின் ஐந்து வகை நிலைகளை அனுபவித்துப் பாடியிருக்கின்றனர். அவ்வகையில் பெரியாழ்வாரின் திருமொழியில் இடம்பெறும் ஐவகை இறைநெறி தத்துவங்களை எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.

**ஆழ்வார்களும் ஐவகை நிலைகளும்**

ஆழ்வார்கள் ஒவ்வொருவரும் இறைவனின் ஐந்து நிலைகளில் ஏதேனும் ஒன்றினில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தனர். **'முதலாழ்வார்கள் மூவரும் பரத்துவத்திலே மண்டி இருந்தனர். திருமழிசையாழ்வார் அந்தர்யாமித்துவத்திலே மூழ்கினார். திருமங்கை மன்னரோ அர்ச்சையிலே தம்மைக் கரைத்துக் கொண்டார். பெரியாழ்வாரும், குலசேகரரும் விபவ அவதாரத்தில் ஆழங்கால் பட்டனர் என்று சொல்லப்படுகிறது' (தே.ந.ச. தேவராஜன், வைணவமும் ஆழ்வார்களும், பாகம் – 2, பக். 678).** பரம்பொருளான எம்பெருமானை வழிபடும் பொழுது, குறிப்பிட்ட வடிவம், பெயர்க்கொண்டு வழிபடுகின்றனர். வழிபடும் அடியார்கள் இறைவனை சென்றடையவும், அவ்வடியார்களுக்கு அருள்புரிந்து காத்தற் பொருட்டும்

இறைவனுக்கு ஐவகை நிலைகள் உண்டு என்பது வைணவச் சமயத்தின் தத்துவமாகும். அவை:

1. **பரத்துவம் (விண்ணாட்டு நிலை)**
2. **வியூகம் (அணிவகுப்பு நிலை)**
3. **விபவம் (பிறப்பு நிலை)**
4. **அந்தர்யாமித்வம் (உள்ளுறை நிலை)**
5. **அர்ச்சை (வழிபடு நிலை)**

என்பனவாகும். இந்த ஐவகை நிலைகளின் தன்மையினை, ஸ்ரீ வசனபூசனம் குறிப்பிட்டிருப்பதை,

> **பூதக ஜலம் போலே அந்தர்யாமித்வம்; ஆவரண**
> **ஜலம் போலே பரத்வம்; பாற்கடல் போலே**
> **வ்யூஹம்; பெருக்காறு போல விபவங்கள்;**
> **அதிலே தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம் (ஸ்ரீ வசனபூஷணம், சூ. 39, பக். 41-42)**

என்ற சூத்திரத்தால் அறியமுடிகிறது.

**பரத்துவ நிலை**

பரத்துவம் என்பது திருமால் வைகுந்தத்தில் வீற்றிருக்கும் நிலையாகும். திருமால் நாராயணன் என்ற திருநாமத்தோடு திருமகள், நிலமகள், ஆய்மகள் ஆகிய மூவரோடும் காட்சியளிப்பார். **“இறைவன் வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் நிலை. செயற்கை கடந்த நிலை, ஒரு நாளும் அழிவில்லாத நிலை, ஒளிமயமான நிலை, துயரச் சுவடறியாத நிலை அங்கு பெருமான், எல்லா நற்பண்புகளும் உடையவனாய், எல்லாப் படைப்புகளையும் கொண்டவனாய்ப் பெரிய பிராட்டியாரோடு வீற்றிருக்கிறான்” (டாக்டர் தெ. ஞானசுந்தரம், வைணவ உரை வளம், ப. 292)**

பரமபதத்தினை நித்தியசூரிகள், வீடுபேற்றுற்ற முக்தர்கள் மட்டும் கண்டு அனுபவிக்க முடியும். பிறவிப் பெருங்கடலில் உழல்பவர்களுக்கு அத்தகைய வாய்ப்பில்லை. பரமபதம் **நித்தியவிபூதி, வைகுண்டம், விசும்பு, அமரர் பெரு விசும்பு, திருநாடு** என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. இவ்விடத்திலுள்ள எம்பெருமான்

**வைகுண்டன், நாராயணன், பரவாசுதேவன்** என்ற திருநாமங்களால் அழைக்கப்படுகிறான். இந்நிலைப் பற்றி வேதங்களில் விரித்துரைக்கப்படுகிறது. அவ்வகையில் பெரியாழ்வாரும் போற்றிப் பல்லாண்டு பாடியதை,

**நமோ நாராயணாவென்று பல்லாண்டும் பரமாத்மனைச்**
**சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே (திருப்பல்லாண்டு. 12)**
**நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணாய என்று**
**பாடும் மனமுடைப் பத்தருள்ளீர்! வந்து பல்லாண்டு கூறுமினே (திருப்பல்லாண்டு. 4)**

என்ற பாசுரடிகள் வெளிப்படுத்துகிறது. பரமபதநாதனுக்கு **நித்தியவிபூதி, லீலாவிபூதி** என்ற இருவகைச் சொத்துண்டு. **விபூதி** என்றால் **உடைமை, சொத்து** என்று பொருள். நித்திய விபூதியென்பது மண்ணுலகத்துக்கு அப்பாலுள்ள விண்ணுலகம் என்றழைக்கப்படும் வைகுந்தாகும். இது என்றும் அழியாதது. லீலா விபூதியென்பது இறைவன் திருவிளையாடலுக்கும் அவனால் உருவாக்கப்பட்ட மண்ணுலகிற்கும் அதிலுள்ள அனைத்துப் பொருள்களையும் குறிப்பதாகும். ஊழி பெருவெள்ளக் காலத்தில் இவ்வுலகையும் மற்றும் அனைத்து பொருள்களையும், ஒரு பொருள் போன்று தன்னுள் அடக்கி ஆலிலையில் துயில் கொண்டவன். மீண்டும் உலகைப் படைக்கும் காலம் வரை அப்பொருள்களைக் காத்தவன் பரமபதநாதன் என்று பெரியாழ்வார் குறிப்பிடுகிறார். இந்நிகழ்வை,

**“ஞால முற்றும் உண்டும் ஆலிலைத்துயில் நாராயணன்” (பெரி.திரு. 3.7.11)** என்ற பாசுரடிகள் விளக்குகிறது. **‘ஆலின் இலையாய் அருள்’ (திரு. 26)** என்றும், **“ஊழி எல்லாம் உணர்வானே” (நா.திரு. 37)** என்றும் இறைவனின் பரத்துவ நிலையினை ஆண்டாள் நாச்சியாரும் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வுலக இயக்கம் அனைத்திற்கும் காரணம் நாராயணன் என்றும் அவனால் பாவை நோன்பும் சிறப்பிக்கப்படும் என்றும் திருப்பாவையின் முதல் பாசுரத்தில் இறைவனின் நிலையைப் பாடுகிறார். இதனை,

**நாராயணனே நமக்கே பறைதருவான்**
**பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய் (திரு. 1)**

என்ற பாசுரடிகள் புலப்படுத்துகிறது.

**வியூக நிலை**

பரமபதத்தில் இருக்கும் இறைவனை அனைவராலும் அடைய முடியாது என்பதற்காக, திருப்பாற்கடலில் வியூக வடிவமாகப் **'வியூக வாசுதேவன்'** என்னும் திருநாமத்துடன் பள்ளிக்கொண்டுள்ளார். **'வியூகம்'** என்பது **'பிரிந்து நிற்றல்'** என்று பொருள்படும். தேவர்களின் வழிபாட்டிற்கெனப் பரம்பொருளான இறைவன் தனித்து நின்று தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் தோற்றம் வியூகம் ஆகும். **படைத்தல், காத்தல், அழித்தல்** என்ற முத்தொழிலைச் செய்தற் பொருட்டு இறைவன் தன்னை இங்கு **வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்நன், அநிருத்தன்** என்னும் நான்கு வியூகங்களாகப் பிரித்துக் கொள்கிறான். இந்நான்கு மூர்த்திகளும் பரம்பொருளின் அம்சங்களாகும். இந்நிலையை பாஞ்சராத்திர ஆகமம் விரித்துக் கூறுகிறது. சங்க இலக்கியப் பரிபாடலும் திருமாலின் வடிவங்களே இந்நான்கும் என்று சுட்டிக் காட்டுவதை,

**செங்கட் காரி கருஙகல் வெள்ளை**
**பொன்கட் பச்சை பைங்கண் மா அல் (பரி 3. 81 - 82)**

என்ற பாடலடிகளால் அறியமுடிகிறது.

திருப்பாற்கடலில் பாம்பனைமீது பள்ளிக் கொண்டிருக்கும் பெருமானை பெரியாழ்வார் பல்லாண்டு பாடி சிறப்பித்திருக்கிறார். இதனை,

**பையுடை நாகப் படைக் கொடியானுக்கு பல்லாண்டு கூறுவனே (திருப்பல்லாண்டு. 8)**

**படுத்த பைநாகனை பள்ளிக் கொண்டானுக்கு பல்லாண்டு கூறுதுமே (திருப்பல்லாண்டு. 9)**

என்ற பாசுரடிகள் விளக்குகின்றது. மற்றொரு பாசுரத்தில் அறிதுயில் கொள்ளும் அப்பெருமானின் அழகினைக் காண ஆழ்வார்ஆசைப்பட்ட விதத்தை,

**வெள்ளை வெள்ளத்தின் மேலோரு பாம்பை மெத்தையாக விரித்து அதன்மேலே**
**கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம் காணலாங்கொல் என்றாசையினாலே (பெரி.திரு. 5.1.7)**

என்ற பாசுரடிகளில் காணமுடிகின்றது. ஆண்டாள் நாச்சியாரும் இவ்வியூக நிலையை **"பாற்கடலுள் பையத்துயின்ற பரமன்" (திரு.பா.எண். 2)** என்று பாடியிருக்கிறார். வியூக நிலை வாசுதேவ பெருமானின் பெருமையை நம்மாழ்வாரும் அருளிச் செய்திருக்கிறார். இதனை,

**எறிகடல் நடுவுள் அறிதுயில் அமர்ந்து**
**சிவன், அயன், இந்திரன், இவர்முதல் அணைத்தோர்**
**தெய்வக் குழாங்கள் கைதொழக் கிடந்த**
**தாமரை உந்தித் தனிப் பெருக நாயக! (நம்.திருவா. 1, 11-14)**

என்ற பாசுரம் விளக்குகிறது.

**விபவ நிலை**

இறைவன் விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு இறங்கி வரும் நிலை விபவமாகும். **'விபவம்'** என்பதற்கு **'அவதாரம்', 'இறங்கி வருதல்'** எனப் பொருள்படும். **"அவதாரம் என்னும் சொல் குறிப்பிட்டதொரு உருவத்தில் அவதரிப்பதற்கு இயைந்து இறங்கிவரும் இறைவனின் இயல்பான உயர்வைச் சுட்டுகிறது" (சுவீரா ஜெயஸ்வரல், வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், ப. 85).** பிறப்பு, இறப்பு இல்லா பேரருளாளனாகிய திருமால் நல்லவர்களை காத்து தீயவர்களை அழிப்பதற்காக அவ்வப்போது அவதாரங்கள் எடுத்ததாகப் புராணங்களும், இதிகாசங்களும் கூறியிருக்கின்றன. கம்பரும் அவதார நோக்கத்தை,

**அறந்தலை நிறுத்தி வேத மருள் சுரந் தறைந்த நீதித்**
**திறந் தெரித் துலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்**
**இறந்துக நூறித் தக்கோ ரிடத்துடைத் தேக வீண்டு**
**பிறந்தனன் றன்பொற் பாத மேத்துவார் பிறப்பறுப்பான் (கம்ப. சுந்தர. காண். பா.எ. 1127)**

எனும் பாடலடிகளால் வெளிப்படுத்தியுள்ளார். திருமால் எடுத்த அவதாரங்கள் எண்ணற்றவையாகும். எனினும் மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பரசுராம, இராம, கண்ண, பலராம, கல்கி முதலிய பத்து அவதாரங்களும் தசாவதாரங்கள் என்று குறிப்பிடப்படுகிறது. உலகை நிலைநிறுத்த இறைவன் தன் நிலையிலிருந்து இறங்கி

வந்து அருள்புரிதல் அவதாரமாகும். ஆழ்வார்களுள் பெரியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும், திருமாலின் தசாவதாரங்களையும் பாடிச் சிறப்பித்த பெருமைக்குரியவர்களாவர். பெரியாழ்வார் ஒரு பாசுரத்தில் திருமாலின் பத்து அவதாரங்களையும் உள்ளடக்கி பாடியதை,

**தேவுடைய மீனமாய், ஆமையாய் ஏனமாய்க் அரியாய்க் குறளாய்**
**மூவுருவில் இராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய் முடிப்பான் கோயில்**
**(பெரி.திரு.பா.எ. 4.9.9)**

என்ற பாசுரடிகள் காட்சிப்படுத்துகின்றது. இறைவனின் ஐந்து வகை நிலைகளில் பெரியாழ்வாரின் மனம் அதிக ஈடுபாடு கொண்டிருந்தது விபவத்திலாகும். விபவ அவதாரங்களில், கண்ணன் அவதாரத்தில் மிக ஆழமாக ஈடுபாடு கொண்டவர் என்பது நாடறிந்த கதையாகும். ஆழ்வார் கண்ணனின் தாய் யசோதையின் பாவனையிலும் பல்வேறு நிலைகளிலும் அவ்வதாரத்தை அனுபவித்து பாடிய திருமொழிகளே மிகுதியாகும். பெரியாழ்வார் தம்முடைய திருப்பல்லாண்டின் தொடக்கத்திலும் **'மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா' (திருப்பல்லாண்டு பா.எண். 1)** என்றும் திருமொழியின் முடிவிலும் **'விட்டுச்சித்தன் மனத்தே கோயில் கொண்ட கோவலன்' (பெரி.திரு. 5.4.11)** என்றும் கண்ணன் அவதாரத்தை பாடிச் சிறப்பித்திருக்கின்றார். இராமவதாரம் பற்றி அவர் அதிகம் பாடவில்லை. எனினும், அவ்வவதாரத்திலும் அவர் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதை, பாசுரங்கள் உறுதி செய்கின்றன. **'நெறிந்த கருங்குழல்'** என்னும் பெரியாழ்வார் திருமொழியில் அனுமன் சீதைக்குக் கூறிய அடையாளங்களைத் தொகுத்துரைக்கும் வகையில் இராமாயணக் கதையின் சுருக்கத்தை எடுத்துரைத்து இராமதாரத்தை போற்றியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆழ்வாரைப் போல அவர் மகளான ஆண்டாளும் திருப்பாவையின் மூன்றாவது பாசுரத்தில் இறைவனின் மூன்றாவது நிலையாகிய விபவநிலையைப் போற்றி பாடியிருக்கிறார். வாமனனாய் வந்து திரிவிக்கிரமனாய் வளர்ந்து நின்றவன் என்பதை,

**ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி**
**நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால் (திரு.பா.எண். 3)**

என்ற பாசுரடிகள் குறிப்பிடுகிறது.

**அந்தர்யாமி நிலை**

இறைவன் தான் படைத்த உயிர்கள், பொருட்கள் என அனைத்திலும் நீக்கமற நிறைந்து உறைந்திருக்கும் நிலை அந்தர்யாமி எனப்படும். **'அந்தர்யாமி'** என்பதற்கு **'மறைமுகமாக'** என்பது பொருள். அந்தர்யாமியாய் அனைத்துயிர்களின் உள்ளத்துக்குள்ளும் தங்கியிருக்கும் இறைவனின் இந்நிலை **'உள்ளுறை நிலை'** ஆகும். இறைவனின் சூக்குமமான இவ்வடிவத்தை அனைவராலும் காணமுடியாது. தவ யோகிகள் மட்டும் தவ வலிமையால் உணர்வர். ஆழ்வார்களனைவரும் திருமாலின் பெருமையை அறிந்த அடியவர்களாதலால் அவர்கள் மனதில் குடியிருந்த இறைவனை உணர்ந்தும் அவ்வனுபவத்தை இவ்வுலகிற்கு உணர்த்தியவர்களும் ஆவர். முதலாழ்வார்கள் மூவரும் இறைவனை உணர்ந்த நிலையை,

**உளம் கண்டாய் நன்னெஞ்சே! உத்தமன் என்றும் உளம் கண்டாய் (மு.திரு.81)**

**கோல் தேடி ஓடும் கொழுந்தே போன்றதே**
**மால் தேடியோடும் மனம் (இ.திரு. 27)**

**இறையாய், நிலன் ஆகி, எண் திசையும் தான் ஆய்,**
**உள்ளத்தின் உள்ளே ஊன். (மூ.திரு. 39)**

என்ற பாசுரடிகள் வெளிப்படுத்துகிறது. அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த பரம்பொருளான இறைவன் அடியவர்களின் மனதில் வந்து குடிக்கொள்வான் என்ற கருத்தை ஆழ்வார் பாசுரங்கள் எடுத்தியம்புகின்றன. **'அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ'** என்ற பரிபாடலின் வரிகளுக்கேற்ப பெரியாழ்வாரும் உலக இயக்கம் அனைத்திற்கும் காரணமாய் இருக்கும் திருமால் தான் முழுமுதற் கடவுள் என்றும், அவரில்லையேல் எதுவுமில்லை என்றும் போற்றியுரைக்கிறார். யாதுமாகி நின்ற அப்பெருமானின் தன்மையை,

**ஆமையாய், கங்கையாய், ஆழ்கடலாய், அவனியாய், அருவரைகளாய்**
**நான்முகனாய், நான்மறையாய், வேள்வியாய்த், தக்கணையாய்த்**
**தானும் ஆனான் (பெரி.திரு. 4.9.5)**

மேற்கண்ட பாசுரடிகள் விளக்குகிறது. அந்தர்யாமி நிலையை ஆழ்வார் வேறொரு கோணத்தில் அனுபவித்து பாடியிருக்கிறார். தம் உடம்பில் இறைவன் வந்து

குடிபுகுந்ததால் அது கோயிலாக மாறிவிட்டதென்றும் ஆதலால் உடம்பு முன்பு போலல்லாமல் மிகுந்த பாதுகாப்பை பெற்றுவிட்டதென்றும் ஆழ்வார் கூறுகிறார். இதனை,

**சிங்கப்பிரான் அவன் எம்மான் சேரும் திருக்கோயில் கண்டீர் (பெரி.திரு. 5.2.4)**
**சுடரொளியாய் நெஞ்சினுள்ளே தோன்றும் என் சோதி நம்பீ (பெரி.திரு. 5.4.10)**
**பெற்றங்கள் மேய்க்கும் பிரனார் பேணும் திருக்கோயில் கண்டீர் (பெரி.திரு. 5.2.6)**

என்ற பாசுரடிகள் எடுத்துரைக்கின்றன. **'ஆசைக்கயிற்றால் ஆடும் பம்பரம் ஓயா நோய்க்கிடம்'** ஆகும். அந்த வகையில் தன் உடம்பைப் பற்றியிருந்த நோய்களுக்கு இனி இடமில்லை என்று அந்நோய்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் தன் கருத்தை தெரிவித்திருக்கிறார். இறைவன் தம்முள் புகுந்ததை,

**மெய்க்கொண்டு வந்து புகுந்து வேதப்பிரனார் கிடந்தார்**
**பைக்கொண்ட பாம்பணையோடும் பண்டன்று பட்டினம் காப்பே (பெரி.திரு. 5.2.1)**

என்ற பாசுரடிகளில் குறிப்பிட்டிருக்கிறார். **"ஆழிமழைக் கண்ணா ஒன்று நீ கை கரவேல்" (திருப். பா.எ. 4)** என்ற பாசுரத்தில் ஆண்டாள் நாச்சியாரும் எம்பெருமானின் அந்தர்யாமி நிலையை பாடிச் சிறப்பித்திருக்கிறார்.

**அர்ச்சை நிலை**

உருவ வழிபாட்டில் இறைவனை எல்லோரும் கண்டு வழிபடக் கூடிய நிலை அர்ச்சை நிலையாகும். பக்தியை வளர்ப்பதற்கு பெருந்துணையாவது உருவ வழிபாடேயாகும். **'அந்தர்யாமியாக உள்ள ஆண்டவனை அறிதல் என்பத அறிஞர்கட்கும் ஞானிகட்குமே முடிந்த செயலாகும். சாதாரண மக்களுக்குச் சிலை வழிபாடு ஒன்று தான் சிறந்த வழி, கோயில்களிலும் வீடுகளிலும் அவரவர் விரும்பும் வடிவத்தில் மண்ணாலோ, கல்லாலோ, சுதையாலோசெம்பாலோ சிலை வடிவில் அமைந்திருப்பது தான் அர்ச்சை நிலை எனப்படும்' (பெரிய திருமொழி, முனைவர் து. லலிதா, ப. 204).** பக்தர்கள் ஏதேனும் ஒரு உலோகம் (அ) பொருள் என தம் மனதிற்கு முழுமையையும் மகிழ்வையும் அளிக்கக்கூடிய உருவத்தைச் செய்து அவ்வுருவத்துகந்த

பெயரையும் சூட்டி வழிபடுகின்றனரோ, அவ்வுருவத்தையும் பெயரையும் ஏற்றுக்கொண்டு இறைவன் அருள்புரியக் கூடியவன் என்பது வைணவ மரபாகும். இம்மரபை பொய்கையாழ்வார் குறிப்பிட்டிருப்பதை,

**தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே**

**தமருகந்த தெப்பேர் மற் றப்பேர் (மு.திரு. 44)**

என்ற பாசுரடிகளால் அறிய முடிகிறது. ஆழ்வார்கள் அனைவரும் அர்ச்சவதாரத்தில் தான் மிகவும் ஈடுபட்டனர். இதனை,

**ஆழ்வார்கள் பல இடங்களிலும் பிரபத்தி**

**பண்ணிற்றும் அர்ச்சாவ தாரத்திலே (ஸ்ரீ வசன பூசனம் சூ. 381)**

என்ற சூத்திரம் கூறுகிறது. ஆழ்வார்களால் அருளிச் செய்யப்பட்டு அர்ச்சவதார கோலமாகிய நின்ற, கிடந்த, இருந்த என்று திருமால் காட்சி தந்து அருளக்கூடிய தலங்கள் நூற்றெட்டினை வைணவ திவ்ய தேசங்கள் என்றழைப்பர். இவற்றுள் பத்தொன்பது திவ்ய தேசங்களிலுள்ள அர்ச்சவதார வடிவங்களை பெரியாழ்வார் போற்றிப் பாடியிருக்கிறார். அவை: **திருக்கோட்டியூர், திருவெள்ளறை, திருமாலிருஞ்சோலை, திருவரங்கம், கடிநகர், அயோத்தி, ஆயர்ப்பாடி, கண்ணபுரம், திருக்குடந்தை, கோவர்த்தனம், சாளக்கிராமம், திருப்பாற்கடல், திருப்பேர்நகர், துவாரகை, வடமதுரை, வதரி, திருவில்லிபுத்தூர், திருவேங்கடம், வைகுந்தம்** போன்ற திருத்தலங்கள் ஆகும்.

இவற்றுள் முதல் ஐந்து திருத்தலங்களில் திருவெள்ளறை, கண்டம் என்னும் கடிநகர் ஆகியவற்றை ஒவ்வொரு திருமொழிகளிலும் திருக்கோட்டியூரை இரண்டு திருமொழிகளிலும் திருவரங்கம், திருமாலிருஞ்சோலை முதலிய திருத்தலங்களை மும்மூன்று திருமொழிகளிலும் பாடிச் சிறப்பித்திருக்கிறார். இதனால் இவ்வைந்து திருத்தலங்களில் உள்ள அர்ச்சவதார மூர்த்திகள் மீது ஆழ்வார் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதை அறிய முடிகிறது. ஏனைய திருத்தலங்களை உதிரிப் பாசுரங்களால் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். திருமாலின் கல்யாண குணங்களை வெளிப்படுத்தும் தன்மையில் திருத்தலங்களிலுள்ள அர்ச்சா வடிவங்கள் அமைந்திருப்பது சிறப்பாகும். பெரியாழ்வாரும் அவ்வவ் குணங்களை அந்தந்த

திருத்தலங்களில் அனுபவித்திருக்கிறார். அந்த வகையில் திருமாலிருஞ்சோலையில் வீற்றிருக்கும் அழகரின் அருளைப் பெற வேண்டும் ஆழ்வாரின் நிலையை,

**அக்கரை என்னும் அனந்தக்கடலுள் அழுந்தி உன் பேரருளால்**
**இக்கரை ஏறி இளைந்திருந்தேனை அஞ்சலென்று கை கவியாய்**
**சக்கரமும் தடக்கைகளும் கண்களும் பீதகவாடை யொடும்**
**செக்கர் நிறுத்துச் சிவப்புடையாய் திருமாலிருஞ்சோலை எந்தாய் (பெரி.திரு. 5.3.7)**

என்ற பாசுரடிகள் உணர்த்துகிறது. அர்ச்சா நிலையில் உள்ள பெருமானை அடைவதற்கான எளிய வழிமுறையை ஆண்டாளும் குறிப்பிட்டிருப்பதை,

**தூயாமாய் வந்து நாம் தூமல் தூவித் தொழுது**
**வாயினாற் பாடி, மனத்தினால் சிந்திக்க (திருப். 5)**

என்ற பாசுரடிகள் விளக்குகிறது.

**முடிவுரை**

- திருமாலின் இறை நெறியை உணர்ந்தவர்கள் பன்னிரு ஆழ்வார்களாவர்.
- பரமபதத்தில் இருக்கும் பெருமானைப் போற்றி பல்லாண்டு பாடியிருக்கும் பெரியாழ்வாரின் அன்பும், பக்தியும் வெளிப்பட்டிருக்கிறது.
- வியூக வடிவிலுள்ள வாசுதேவ பெருமானின் பன்னிரு நாமங்களையும் ஆழ்வார் சிறப்பித்துப் பாடியிருக்கிறார்.
- விபவ நிலையிலுள்ள அவதாரங்களில் கண்ணன் அவதாரத்தில் ஆழ்வார் ஆழங்கால் பட்டவரென்பதை பெரியாழ்வார் திருமொழி உறுதிப்படுத்துகிறது.
- அந்தர்யாமியாய் இருக்கும் இறைவனை உணர்ந்து வழிபடுவதே உண்மையான பக்தி நெறி என்று ஆழ்வார் பாசுரங்கள் அறிவுறுத்துகின்றன.
- அர்ச்சை நிலையிலுள்ள திருமாலின் கல்யாண குணங்களை ஆழ்வார் அந்தந்த திவ்யதேசங்களில் அனுபவித்துப் பாடியதை உணர முடிகிறது.
- எந்நிலையில் இருப்பினும் பரம்பொருள் ஒன்று என்ற வைணவ தத்துவத்தை வலியுறுத்துகிறது.

- வைணவ சமய கோட்டிபாட்டின்படி இறைவனுக்கு பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை எனும் ஐந்து நிலைகள் உண்டு என்றும் அந்நிலைகளில் உள்ள திருமாலின் சிறப்புகளையும், மேன்மைகளையும் எடுத்துரைக்கும் வகையில் பெரியாழ்வாரின் பாசுரங்கள் அமைந்திருக்கின்றன.

**துணைநூற்பட்டியல்**

[1] திரு. ராமசுப்பிரமணிய சர்மா, திருமதி ஆர். பொன்னம்மாள் (உ.ஆ), *ஸ்ரீ நாலாயிர திவ்ய பிரபந்தம்*, முதலாயிரம், கங்கை நிலையம், தி.நகர், சென்னை – 17, 2015.

[2] முனைவர் இரா.வ. கமலக்கண்ணன், *நாலாயிர திவ்ய பிரபந்தம்*, (மூலமும் உரையும்), வர்த்தமானன் பதிப்பகம். தி. நகர், சென்னை – 17, 2011.

[3] தே.ந.ச. தேவராஜன், *வைணவமும் ஆழ்வார்களும்*, ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை – 17, 2009.

[4] முனைவர் து. லலிதா, *பெரிய திருமொழி – ஒரு பார்வை*, வீர ஓவு பதிப்பகம், கோயம்புத்தூர் – 641043, 2002.

[5] டாக்டர் எம். நாராயணவேலுப்பிள்ளை, *சங்க இலக்கியம் வழங்கும் பரிபாடல்*, நற்பவி பிரசுரம், சென்னை – 17, 2008.

[6] டாக்டர் தெ. ஞானசுந்தரம், *வைணவ உரைவளம்*, தாயம்மை பதிப்பகம், சென்னை – 17, 1989.

[7] டி.எஸ். ராஜகோபாலன், பிள்ளை. *லோகாசார்யர் அருளிய ஸ்ரீ வசன பூஷணம்* (விளக்கவுரை), ஆழ்வார்கள் அமுத நிலையம், சென்னை, 1994.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.